# தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்

முதுநிலைப் பட்டத் தேர்வு

தமிழ் - முதலாமாண்டு

திசம்பர் 2020 மே 2021

பாடக் குறியீட்டு எண்.
மு.த.2

தாள் 2 : தொல்காப்பியம் - எழுத்ததிகாரம்

நேரம்: 3 மணி | உயர் அளவு மதிப்பெண்:100

## பகுதி – அ

**I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.** (10x2=20)

1. சுட்டெழுத்துக்கள் குறித்து எழுதுக.
2. குறிற்கீழ் ஒற்றாகா மெய்கள் எவை?
3. மொழிக்கு ஈறாகும் உயிர்களை எழுதி, சான்று தருக.
4. ர,ழ – பிறத்தலை எழுதுக.
5. ‘அஃறிணை விரவுப்பெயர் இயல்புமார் உளவே’ – விளக்கம் தருக.
6. ‘மரப்பெயர்க் கிளவிக்கு அத்தொடு சிவனும் ஏழன்’ –விளக்குக.
7. ‘நாடுரி’ புணர்ச்சி விதி கூறுக.
8. ‘ஆணும், பெண்ணும் அஃறிணை இயற்கை’ – விளக்குக.
9. மூன்று+உழகிடு= புணர்மொழியைத் தருக.
10. ஐந்தன் ஒற்று மெல்லெழுத்தாகுதலை விளக்குக.

## பகுதி – ஆ

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.** (5x6=30)

11. எழுத்துக்களின் அளவு குறித்தெழுதுக.
12. குற்றியலுகரம் பற்றிச் சான்று தந்து விளக்குக.
13. பேச்சுறுப்புக்களின் பெயர்களைச் சுட்டுக.
14. உடம்படுமெய் குறித்தெழுதுக.
15. “உடைமையும் இன்மையும் ஒருவயின் ஒக்கும்” – விளக்குக.
16. ‘எல்லாரும், எல்லீரும்’ என்னும் பெயர்கள் பெறும் மாற்றங்கள் யாவை?
17. உகர ஈற்றுச் சொற்கள் புணரும் விதத்தை எழுதுக.
18. திசைப்பெயர் முன் திசைப்பெயர் புணரும் விதத்தைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி - இ

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்க.** (5x10=50)

19. மெய்மயக்க வகைகளைச் சான்றுக் காட்டி விளக்குக.
20. மெய்யெழுத்துக்கள் பிறக்கும் விதம் குறித்து எழுதுக.
21. தொல்காப்பியரின் புணரியல் கோட்பாட்டினைப் புலப்படுத்துக.
22. இரண்டாம் வேற்றுமைத் திரிபு குறித்துச் செய்திகளைச் சான்றுகாட்டி நிறுவுக.
23. உருபுகள் பெயர்களுடன் புணரும் இயல்பை விளக்கி வரைக.
24. அகர, ஆகார ஈற்றுச் சொற்களின் புணர்ச்சியைத் தொகுத்தெழுதுக.
25. மகர ஈற்றுச் சொற்கள் புணருமாற்ற விளக்குக.
26. குற்றியலுகர எண்ணுப்பெயர் புணர்ச்சிகள் குறித்துத் தொகுத்துரைக்க.